**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**OS.NO. 25/2021 PW -1**

| | |
|---|---|
| Name | :- மகேந்திரன் |
| Husband/Father Name | :- சிவலிங்கம் |
| Village /Area | :- வன்னிவேடு |
| Taluk | :- வாலாஜா |
| Occupation | :- |
| Age | :- 62 |
| Religion | :- |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 04.01.2023 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா.1 முதல் விசாரணை.**

எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனக்கு படிக்க தெரியும். நான் சொன்னதை தான் டைப் செய்யப்பட்டுள்ளது.

பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு

1. 26.04.1956ந் தேதியிட்ட துலுக்கானம் என்பவர் சிவலிங்கம் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல். **வா.சா.ஆ.1.**
2. சிவலிங்கம் அவர்களின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.2.**
3. நத்தம் தனி தாசில்தார் வாலாஜா அவர்கள் குப்பம்மாள் பெயரிலுள்ள வாதி பெயரிலும் வழங்கப்பட்ட பட்டா. **வா.சா.ஆ.3.**
4. வாதி பெயரிலுள்ள மின் இணைப்பு எண். SC.234-025-167 ன் மின் இணைப்பு அட்டை **வா.சா.ஆ.4.**
5. மின் கட்டணம் செலுத்திய ரசீதுகள் **வா.சா.ஆ.5.**
6. குப்பம்மாளின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.6.**
7. புகைப்படங்கள் **வா.சா.ஆ.7.**
8. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகாரின் நகல் **வா.சா.ஆ.8.**

ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1. பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். நான் கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன்.நான் ஆரம்பத்தில் ஏஎஸ்எம் ஆக பெங்களூரில் 5 ஆண்டுகள் பணிபுரிந்துவிட்டு கார்வார் என்ற இடத்தில்

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாளராக பணி உயர்வு பெற்றேன். நான் கார்வார், பாம்பே மற்றும் திருச்சியில் பணிபுரிந்தேன். என்னுடைய தகப்பனார் பெயர் சிவலிங்கம். தாயார் பெயர் குப்பம்மாள். என்னுடைய தந்தையார் மற்றும் தாயாருக்கு பூர்வீகம் ஆற்காடு வட்டம் கூராம்பாடி ஆகும். உங்களின் அப்பாவின் அப்பாவிற்கு எந்த ஊர் என்றால் கூராம்பாடி தான். உங்களின் அப்பாவும் அம்மாவும் வன்னிவேட்டில் குடியிருந்து வந்தார்கள் என்றால் என்னுடைய அப்பாவும் அம்மாவும் வன்னிவேட்டில் என்னுடைய அப்பா வாங்கிய வீட்டில் குடியிருந்து வந்தார்கள். என்னுடைய பெற்றோருக்கு மொத்தம் 5 பிள்ளைகள். 4 சகோதரிகள் மற்றும் நான். 4 சகோதரிகள் முறையே காஞ்சனா, தினமணி, அல்லி, பிரேமகுமாரி.

2. என்னுடைய அப்பா தோல் பதனிடும் ஆலையில் லேபராக பணிபுரிந்து வந்தார். என்னடைய தாயார் விவசாய கூலியாக இருந்து வந்தார். உங்களுடைய சகோதரிகள் உங்களுடைய பெற்றோர் ஈட்டிய வருமானத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்றால் ஆமாம்.உங்களை படிக்க வைத்தது யார் என்றால் என்னுடைய தாய் மற்றும் தந்தை ஆவார். எதுவரை படித்து வந்தீர்கள் என்றால் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வாலாஜாவில் உள்ள ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் என்னுடைய தங்கைகளான அல்லி மற்றும் பிரேமகுமாரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படித்து வந்தோம். நீங்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக உங்கள் தாய் தந்தையுடன் வாழ்ந்து வந்தீர்கள் என்றால் ஆமாம்.

3. அல்லி சிறிது நாட்கள் வேலைக்கு சென்று வந்தார். பிரேமகுமாரி ஒரு தனியார்நிறுவனத்தில் சிறிது காலம் வேலை பார்த்து வந்தார். அவர்கள் எதுவரை படித்துள்ளார்கள் என்றால் நான் வெளியே வேலைக்கு சென்ற பிறகு தொடர்பு இல்லை அதனால் எனக்கு தெரியவில்லை. பிரேமகுமாரி பிரம்புகூடை செய்யும் வேலைக்கு சென்று வந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது என்னிடம் சொல்லமாட்டார்கள். நான் 19 வயதில் வேலைக்கு சேர்ந்துவிட்டேன். உங்கள் சகோதரிகள் எப்படி வாழ்ந்து வருகிறார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் ஆமாம் அவர்கள் என் அப்பாவின் அரவணைப்பில் இருந்தார்கள். காஞ்சனா மற்றும் தினமணி என்பவருக்கு என்னுடைய அப்பா திருமணம் செய்து வைத்தார்.

4. உங்களின் சகோதரிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் என்னுடைய தந்தையின் மறைவிற்கு பிறகு சகோதரிகளுக்கு நான் தான் உதவிசெய்து வந்தேன். நீங்கள் சாட்சியம்

அளித்துள்ள சங்கதிகள் உங்கள் வழக்கு சங்கதிகளுக்கு முரண்பாடாக அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு 4 சகோதரிகளும் உங்களுடைய அப்பாவின் பராமரிப்பில் தான் வன்னிவேட்டில் இருந்து வந்தார்களா என்றால் ஆமாம். உங்களுடைய அப்பா எப்போது இறந்து போனார் என்றால் 1985 ஆம் ஆண்டு இறந்து போனார் மாதம், தேதி ஞாபகமில்லை. நீங்கள் எப்போது வேலைக்கு சேர்ந்தீர்கள் என்றால் 11/01/1981 அன்று வேலைக்கு சேர்ந்தேன்.

4. நீங்கள் திருமணம் செய்த நபர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்றால் பெரம்பலூரைச் சேர்ந்தவர். அந்த திருமணம் ஆனது நீங்களாகவே செய்து கொண்டீர்களா என்றால் ஆமாம். உங்கள் மனைவி என்ன பணியில் இருந்தார் என்றால் ஆசிரியராக இருந்தார். உங்கள் மனைவி எப்போது ஆசிரியராக பணியில் சேர்ந்தார் என்றால் தற்போது எனக்கு சரியாக ஞாபகமில்லை. நீங்கள் சொல்வது போல் வீட்டை நீங்கள் கட்டவில்லை உங்கள் தந்தையார் தான் கட்டினார் என்றால் இல்லை நான் தான் வீட்டை கட்டினேன் அந்த இடம் மட்டும் அவருக்கு சொந்தமானது. எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. 5ந்தில் ஒரு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பாகப்பிரிவினை ஏற்படும் வரை என்னை யாரும் தொந்தரவு செய்யாமல் இருக்க வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். நீங்கள் வீட்டை தனியாக கோருவது சரியானது இல்லை என்றால் சரியல்ல.

5. நீங்கள் தற்போது சொல்வது போல் தரை பகுதியை கோருவது போல் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தினமணி எனக்கு 2வது சகோதரி ஆவார். 2வது சகோதரியின் கணவர் தேசிய நெடுஞ்சாலைத் துறையில் வேலை பார்த்து வருகிறார். 2வது சகோதரியின் கணவர் தேசிய நெடுஞ்சாலை துறையில் பணியாற்றி வந்ததனால உங்களுக்கு பண உதவி தேவைபட்டதற்காக நீங்கள் வழக்கிற்காக இட்டுக்கட்டி சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

6. தினமணி இன்னும் வன்னிவேட்டில் தான் வசித்து வருகிறார். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகன் ஒரு மகள் உள்ளனர். நான் 2000 அல்லது 2003ஆம் வருடம் விஆர்எஸ் கொடுத்துவிட்டேன். நீங்கள் சொல்வது போல் புதியதாக வீடு எதுவும் கட்டப்படவில்லை. ஏற்கனவே இருந்த வீட்டில் தான் வசித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த சொத்திற்கும் உங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள்

குடியிருக்கும் வீடான தினமணியின் கணவர் மற்றும் மற்ற சகோதரிகள் சேர்ந்து அவர்களின் வருமானத்தை கொண்டு கட்டியது என்றால் சரியல்ல.

7. உங்களுடைய மகன் உங்கள் சகோதரி தினமணியின் பராமரிப்பில் தான் இன்றும் இருந்து வருகிறார் என்றால் இல்லை. உங்களுடைய மனைவி எங்கு வேலை பார்த்து வருகிறார் என்றால் பெரம்பூரில் வேலை பார்த்த வருகிறார். நீங்களும் உங்கள் மனைவியும் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள் என்றால் ஆமாம். பிரேமகுமாரியின் கணவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் ஆமாம். பிரேமகுமாரி எங்கு எப்படி வாழ்ந்து வருகிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது எனக்கு எந்த தகவலும் சொல்வதில்லை. உங்களுடைய சகோதரிகளுக்கு நீங்கள் எந்த உதவியும் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் உங்களுக்கு 5ந்தில் ஒரு பாகம் கிடைப்பதில் ஏதாவது ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. உங்கள் அப்பா வாழ்ந்து வந்த அதே வீட்டில்தான் உங்கள் சகோதரிகள் வாழ்ந்து வருகிறார்கள் நீங்கள் தான் அவர்களுக்கு தொந்தரவு செய்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் குடியிருக்கும் வீட்டில் குடியிருப்பதற்கு ஆதரவாக என்ன ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ரேசன் கார்டு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் ஆதார்கார்டு இருக்கிறது. அதில் பெரம்பலூர் முகவரி உள்ளது. இந்த நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

**Sd/- D.Naveen Durai Babu,**
District Munsif cum Judicial Magistrate,
**Ranipet.**